REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 13உ வியாழன் (27—12—56) ★ ★ வெளியீடு: மார்கழி 14உ வெள்ளி (28—12—56) [இதழ் 172

தமிழ் நாட்டிலுள்ள ஏலகிரி மலை

கோடைகாலத் தங்குமிடமாக இடம் பெறக்கூடும்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், வட ஆற்காடு மாவட்டம் ஜோலார்பேட்டையிலிருந்து ஏலகிரி மலைப்பகுதியில் எட்டு மைல் நீளத்திற்கு சாலை அமைப்பதற்கான திட்டமொன்று இடம் பெற்றுள்ளது.

ரூ. 10 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ள இத் திட்டம், டில்லிப் பேரரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கான துவக்க வேலைகள் அடுத்த சிற

(4-ம் பக்கம் பார்க்க)

தி. மு. கழகத்திற்கு தேர்தல் சின்னம்: தனியாக ஒதுக்கித்தர முடியாதாம்!

ஆனால் கட்சி விரும்பும் சின்னம் எல்லா அபேட்சகருக்கும் அளிக்கப்படுமாம்!

தேர்தலுக்குப் பிறகு வாக்குகளின் அடிப்படையில் சின்னங்கள் ஒதுக்குவார்களாம்!

தேர்தல் கமிஷன் அறிக்கை

புதுடில்லி, டிச. 26—

"திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தனியாக ஒரு தேர்தல் சின்னம் ஒதுக்கித் தர முடியாது என்றாலும், அந்தக் கட்சி அபேட்சகர்கள் அனைவரும், கட்சி விரும்புகிற சின்னத்தை ஒருமுகமாகக் கேட்பார்களானால், அவர்கள் விருப்பப்படியே அந்தச் சின்னம் ஒதுக்கித் தரப்படும்" என்று, தேர்தல் கமிஷன் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

தேர்தல் சின்னங்கள் வழங்குவது பற்றி கமிஷன் இன்று வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பொன்றில் கூறியிருப்பதாவது:—

"இதுவரை அங்கீகாரம் பெறாத ஆறு கட்சிகள் அகில இந்தியக் கட்சிகளாக அங்கீகாரம் கோரியுள்ளன. 19 கட்சிகள், பல்வேறு மாநிலங்களிலும் மாநிலக் கட்சிகளாக அங்கீகாரம் கோரியுள்ளன.

"சென்னை மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், அங்கீகாரம் கோரி, தனிச் சின்னம் ஒதுக்கித்தரக் கேட்டிருந்தது.

"இந்தக் கட்சிகளை எல்லாம் அங்கீகரிக்கவோ, அல்லது தனிச் சின்னம் ஒதுக்கித் தரவோ தேவையான ஆதாரங்கள் இப்போது இல்லை; வாக்காளர் ஆதரவு இவர்களுக்கு எவ்வளவு உண்டு என்பதும் தெரியவில்லை.

"ஒரு கட்சியின் அபேட்சகர் பொதுத் தேர்தலின்போது குறைந்தபட்சம் 3 சதவிகித வாக்குகளாவது பெறவேண்டும்; அப்போதுதான், அந்தக் கட்சியைத் தேர்தல் கமிஷன் அங்கீகரிக்கும்.

"எனவே, இப்போதைய பொதுத் தேர்தல்களுக்குப் பிறகு, இந்தக் கட்சிகளின் அங்கீகாரம் பற்றி யோசிக்கலாம்.

'எனவே, இப்போதைய தேர்தல்களின்போது இந்தக் கட்சிகளுக்கு தனியாக தேர்தல் சின்னங்கள் ஒதுக்கப்படமாட்டாது.

ஆனால்...!

"ஆனால் ஒவ்வொரு கட்சியும் தான் நிறுத்தும் அபேட்சகர்களை, இஷ்டமான சின்னத்தையே தங்களின் முதல் விருப்பச் சின்னமாகக் கேட்குமாறு கூறவேண்டும்; அப்போது, அந்தக் கட்சி அபேட்சகர் அத்தனை பேருக்குமோ, அல்லது மிகப் பெரும்பாலானோருக்கோ தாங்கள் விரும்பும் சின்னம் வழங்கப்படும்.

முன்கூட்டியே!

"இப்படி ஒரு கட்சி தேர்ந்தெடுக்கிற சின்னத்தை அது முன்கூட்டியே தேர்தல் கமிஷனுக்குத் தெரிவித்துவிட வேண்டும்; மேலும், அந்தக் கட்சி அபேட்சகர்கள் அனைவரும், குறிப்பிட்ட அந்தச் சின்னத்தையே தங்களின் முதல் விருப்பமான சின்னமாகக் கேட்டிருக்கிறார்கள் என்றும் தேர்தல் கமிஷனுக்குத் தெரிவிக்க வேண்டும்.

தேர்தலுக்குப் பின்!

"தேர்தலுக்குப் பின் கமிஷன், சம்மந்தப்பட்ட கட்சிகளின் அங்கீகாரம் குறித்து ஆலோசித்து, சரியான தோர் முடிவெடுப்பதற்கு வசதியாயிருக்கும் வகையில் ஒரு கட்சி அபேட்சகர் தனது அபேட்சா பத்திரத்தை வாபஸ் பெற்றுக்கொண்டால் அந்தத் தகவலையும், உடனே அந்தக் கட்சியும் வாபஸ் பெறும் அபேட்சகரும், தேர்தல் கமிஷன், மாநில தேர்தல் அதிகாரி, தொகுதித் தேர்தல் அதிகாரி ஆகியோருக்கு தகவல் தந்துவிடவேண்டும்.

"இந்த வழிமுறைப்படி நடக்காத எந்த ஒரு அபேட்சகரையும், பின்னால் கட்சிக்கு அங்கீகாரம் தருவது பற்றி யோசிக்கும்போது, சம்பந்தப்பட்ட கட்சியின் அபேட்சகர் என்று கமிஷன் ஏற்றுக்கொள்ளாது.

"கட்சி விரும்புகிற தேர்தல் சின்னம், சில கட்சி அபேட்சகர்களுக்குக் கிடைக்காமற் போய்விடலாம்; அத்தகைய அபேட்சகர்கள் பெற்ற வாக்குகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான், கட்சிக்கு அங்கீகாரம் வழங்குவது பற்றி கமிஷன் யோசிக்கும்."

காங்கிரசுக்கு எதிராக முன்னணி!

இராஜஸ்தானில் முன்னாள் மன்னர்கள் முயற்சி?

ஜோத்பூர், டிச. 25—

காங்கிரசுக்கு எதிராகத் தேர்தலின்போது ஒரு முன்னணியை அமைக்க இராஜஸ்தான் மேட்டுக் குடியினர் ஒரு முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்களாம்.

முன்னாள் மன்னர்கள், ஜாகீர்தார்களிடையே பெரும் அதிருப்தி நிலவுகிறதாம்!

தாங்கள் அனுபவித்த செல்வாக்கு, அதிகாரம் எல்லாம் போய்விட்டதால், 'இளவரசர்'கள் எல்லாம் கவலைப்படுகிறார்களாம்!

ஜாகீர் முறை ஒழிப்பு, ஜாகீர்தார்களுக்குக் கட்டோடு பிடிக்கவில்லையாம்!

'இராஜபுத்திரர்'களோ, தாங்கள் வெகுநீண்ட நாட்களாக அலட்சியப்படுத்தப் படுவதாகக் கூறுகின்றனராம்!

"இந்த மூன்று கூட்டத்தவரும் சேர்ந்து, வரப்போகும் தேர்தலில் காங்கிரசை எதிர்க்க ஒரு முன்னணி அமைக்கப்போகிறார்களாம்!

'தொழில் அபிவிருத்தியில் சென்னை பின்தங்கிக் கிடக்கிறது'

'இரண்டாம் திட்டத்தில்கூட புதிய தொழில் ஏதுமில்லை'

'கஷ்டங்களிடையும் ஜப்பான் முன்னேறியிருக்கிறதே

'சென்னையில் மட்டும் தொழில்கள் நிறுவ முடியாதா?'

மத்திய மந்திரியிடம் மதுரை-முகவை வர்த்தகக் கழகம் முறையீடு

மதுரை, டிச. 26—

"சென்னை மாநிலத்தைத் தொழில் துறையில் முன்னேறும் வகையில் சில கனரகத் தொழில்களையேனும் நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

"இரண்டாம் திட்டத்தில் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கும் கனரகத் தொழில்களில் ஒன்றுகூட சென்னை மாநிலத்தில் நிறுவத் திட்டமிடப்படவில்லை,"

என்று, மதுரை—இராமநாதபுரம் வர்த்தகக் கழகத்தினர், மத்திய கனரகத் தொழில் மந்திரி மனுபாய் ஷா என்பாரிடம் தந்துள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

"எத்தனையோ குறைபாடுகளும் கஷ்டநஷ்டங்களும் இருந்தபோதிலும், ஜப்பான், கனரகத் தொழில்களில் முன்னேறியுள்ளது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

சென்னையில் நிறுவ ஆதாரம் உண்டே!

"இதர மாநிலங்களைவிட, தொழில் அபிவிருத்தியில் சென்னை பின் தங்கிக்கிடக்கிறது என்ற உண்மை, கனரகத் தொழில்களை நிறுவுவதில் சென்னைக்கு முதலிடம் தருவதற்குப் போதுமான காரணமாகும்.

"சிறிது கஷ்டங்களிருப்பினும், சென்னை மாநிலத்தில் புதிய தொழில்கள் துவங்கும் திட்டங்கள் அமுல் செய்யப்பட வேண்டும் என்பதுடன், தொழில் நுணுக்கப் பயிற்சிப் பள்ளிகளும், எஞ்சினீயரிங் கல்லூரிகளும் துவங்கப்பட வேண்டும் என்றும் கோருகிறோம்,"

என்றும் அந்த மகஜரில் கூறப்பட்டிருக்கிறது.

89 தொழில் திட்டங்களுக்கு அனுமதி தரப்பட்டதாம்!

சென்ற ஆண்டில், மத்திய அரசாங்க வர்த்தக - தொழிலியல் இலாகாவைச் சேர்ந்த பொருளாதாரப் பிரிவும், சில அந்நிய நாடுகளும் கூட்டாகச் சேர்ந்து நடத்தும 89 தொழில் திட்டங்களுக்கு அனுமதி தரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

படகுகள் கட்டுவதற்கு சென்னையின் திட்டம்

படகுகள் தயாரிப்பதற்கான திட்டம் ஒன்றை சர்க்கார் அங்கீகரித்திருக்கிறதாம்.

மீன் பிடிப்பதற்கான இந்தப் படகுகள், மீன் இலாகாவிற்குத் தேவைப்படுகின்றனவாம்.

இந்தப் படகு தயாரிக்கும் இடம் குறித்து சர்க்கார் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லையாம்.

இந்தத் தகவலை மந்திரி பக்தவத்சலம் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் சட்டசபையில் கூறியிருக்கிறாராம்.

பொதுத் தேர்தல் ஏற்பாடுகள்

சென்னை சர்க்கார் பல அரசியல் கட்சிகளையும் கலந்தாலோசிக்கும்

சென்னை, டிச. 26—

வரும் ஜனவரி 10-ந் தேதியன்று, வரப்போகும் பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசிப்பதற்காக நிதி மந்திரி சுப்பிரமணியம், பல அரசியல் கட்சியினரையும் அழைத்துப் பேசுவார் என்று தெரியவருகிறது.

இந்தத் தகவலை அவர் சட்டசபையில் வெளியிட்டிருக்கிறார்.

சுதந்திரமான — நேர்மையான முறையில் தேர்தல் நடைபெறும் என்றும், இதற்கு எல்லாக் கட்சியினரும் ஒத்துழைக்கவேண்டும் என்றும், எங்காவது ஒழுங்கீனங்கள் காணப்பட்டால் அவற்றை உடனே சர்க்காருக்குத் தெரிவித்தால் உடனடியாக சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்து நிலைமையைச் சரி செய்யும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நம் நாடு

சென்னை 27—12—'56 வியாழன்

வாய்ப்பு நெருங்குகிறது!

'தன்னெஞ்சறிவது பொய்யற்க; பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்' என்று கூறிப் போந்தார் வள்ளுவர். மனமறிந்து பொய் சொல்லாதே; சொன்னால் உன் மனச்சாட்சி உன்னை வாட்டும் என்பது பொருள். இந்தக் குறட் கருத்தை நாம் நிதி மந்திரி சுப்பிரமணியம் அவர்களுக்கு நினைவூட்ட வேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஆனால், மனச்சாட்சியைப் பதவிக்காகப் பண்டமாற்றுச் செய்துவிட்ட அந்தக் கோவைக் குமரனுக்கு, இந்தக் குறட் கருத்து புத்தி புகட்டுமா என்பது சந்தேகத்திற்குரியதே!

தொழில் அபிவிருத்தித் துறையில், தென்னாடு, வெகு பயங்கரமான அளவிற்குப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மை, 'பிரிவினை வாதிகள்' என்று 'பழி'க்கப்படும் நம்மால் மட்டும்தான் அம்பலப்படுத்தப்பட்டு வருகிறது என்பதல்ல. 'பரந்த மனம்' கொண்ட, ஆனால் அதேநேரத்தில் தமிழ் மக்களின் — தென்னாட்டவரின்—திராவிடரின் நலனில் இருதயசுத்தியான அக்கரையும் விசுவாசமும் கொண்ட நல்லோர் பலராலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பதை இங்கு நாம் அடிக்கடி எழுதிவந்திருக்கிற தலையங்கங்கள் விளக்கியிருக்கின்றன. ஏன்? கனம் நிதி மந்திரி சுப்பிரமணியம் அவர்களே இந்த உண்மையை இரண்டுவேறு சந்தர்ப்பங்களில் ஒப்புக்கொண்டுமிருக்கிறார்.

ஆனாலும், 'நாம் ஒப்புக்கொண்ட உண்மையையே மறுத்துப் பேசுகிறோமே' என்ற எண்ணம் எழாத அவரது உள்ளம் தூய்மையானது என்றோ, தன்னை மந்திரி பதவியிலமர்த்தி, திங்கள்தோறும் பத்து நூறு ரூபாய்களைச் சம்பளமாகத் தந்து, செய்கிற கொடுமைகளை எல்லாம் அனுமதித்து சகித்துக் கொண்டிருக்கிறார்களே தமிழ் மக்கள், அவர்களது நலனில் கடுகளவேனும் அக்கரை கொண்டது என்றோ, எவராலும் கொள்வதற்குரியதல்ல.

'தொழில்கள் நிறுவுவதில் தமிழ்நாடு புறக்கணிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றது' என்று இரண்டு நாளைக்கு முன் சென்னை சட்டசபையில் அவர் பட்ஜெட் விவாதத்திற்கு பதிலளிக்கையில் கூறியிருப்பது, பச்சைப்புளுகு என்பதைத் தவிர வேறென்ன?

தூத்துக்குடியில், இரும்பு உருக்கு வர்த்தகர் மாநாடு ஒன்றில் சில நாட்களுக்குமுன் பேசிய இதே 'கனம்,' 'தொழில் துறை அபிவிருத்தியில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படுவது வெறும் பிரச்சாரமல்ல,' என்று குறிப்பிட்டார்.

அன்று அவர் கூறிய வாசகங்கள் இன்னும் தமிழ் மக்களின் நெஞ்சத்தில் பசுமையாகவே தங்கியிருக்கின்றன; அவற்றை மறந்துவிடுகிற அளவுக்கு, விழிப்புற்றுவரும் தமிழர்களின் ஞாபக சக்தி குறைந்துவிடவில்லை. ஆனால் நிதியமைச்சர், தான் மறந்துவிட்டவர்போல சட்டசபையில் பேசுகிறார். அவரது நெஞ்சினை அழுத்திக் கொண்டிருக்கும் இந்த உண்மை, அவரது நினைவிலிருந்து தப்பிவிட்டது என்று கூறிட முடியாது. உறுத்திக் கொண்டிருக்கும் இந்த உண்மையை, இல்லை என்று கூறிட அவருக்கு எப்படித்தான் வாய் வருகிறதோ தெரியவில்லை. துணிந்து, மனமறிந்து பொய் சொல்லுகிறார்.

'குற்றச்சாட்டு ஆதாரமற்றது' என்ற ஒரு பொய் சொன்னதோடு நின்றிருந்தாலாவது தனது 'பதவி'க்கு வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் தந்து வரும் பாதுகாப்பிற்கு நன்றி செலுத்தும் வகையில் அவர்களை, இந்த நாட்டு மக்களின் கோபப் பார்வையிலிருந்து தனிமைப்படுத்துவதற்காகக் கூறுகிறார் என்று கருதித் தொலைக்கலாம். ஆனால் சட்டசபையில் அவர், மற்றுமொரு பெரும் பொய்யையும் கூறியிருக்கிறார்.

'தேர்தல் நேரத்தில் வாக்காளரை ஏமாற்ற மேற்கொள்ளப்படுவதே இந்தக் கோஷம்' என்று அவர் கூறியிருப்பது கலப்பற்றப் பொய் என்பதைத் தவிர வேறென்ன?

'முதல் ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரில் ஒரு திட்டம் உருவாகிறது; அதன் அம்சங்கள் இவை, இவை' என்ற விவரங்கள் வெளியான நாளிலிருந்து, இந்த மாநிலத்து மந்திரிகளாயிருப்போரில் பலருக்கு 'ஐந்தாண்டுத் திட்டம் என்றால் என்ன?' என்பதே விளங்காததாயிருந்த காலத்திலேயே நாம், அந்தத் திட்டம், தென்னாட்டவரை வடநாட்டவர் பகிரங்கமாக மோசடி செய்கிறார்கள் என்பதற்குத் தெளிவான எடுத்துக்காட்டு என்று விளக்கம் தந்துள்ளோம்.

அவ்வாறிருக்க, இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் வடவர், தென்னாட்டவரை வஞ்சித்தக் கொடுமையை, தேர்தல் என்ற பேச்சு எழுவதற்கு நெடுநாட்களுக்கு முன்பே உணர்ந்துள்ள மக்களை, மந்திரி சுப்பிரமணியம் தனது பொய்மொழியால் ஏமாற்றிவிட நினைக்கிறாரா?

வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலளித்த மந்திரி, இப்படி பொய்மூட்டை அவிழ்ப்பதற்குக் காரணமான வகையில் பிரச்சினையை எழுப்பிய ஒரு 'புரட்சி வீரர்,' அன்றைக்குத்தான் இந்த உண்மையை உணர முடிந்தது என்பதினாலோ என்னவோ, மந்திரி பொய் கூறும்போது, 'தூத்துக்குடி மாநாட்டில்நீங்கள் ஒப்பிய உண்மையை, சட்டசபையில் மறுக்கிறீர்களே' என்று மடக்கிக் கேட்கத் தோன்றவில்லை போலும்! இவர்களைப் போன்ற 'புரட்சி வீரர்'கள் தான் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்ற ஸ்தானத்தில் அமர்ந்திருக்கிறார்கள் என்பது, தமிழ் மக்களின் கூரிய கவனத்திற்குரியதாகும்.

மந்திரிகள் 'புனிதமான' சட்டசபையில் பொய் கூறுவதும், அதனைத் தட்டிக்கேட்கத் தெரியாதவர்கள் எதிர்க்கட்சியிலிருப்பதும் போன்ற அவல நிலைகளை மாற்ற அரியதோர் வாய்ப்பு நெருங்கிக்கொண்டிருக்கிறது; தமிழ் மக்கள் விழிப்போடிருக்கவேண்டும்.

திரித்துக் கூறலும் இழித்துப் பேசலும்!

ஆலைகளைப்புதுப்பிக்க டில்லி தரும் உதவி

தமிழ் நாட்டிற்கும் வாய்ப்பு உண்டா?

சென்னை, டிச. 25—

இந்தியாவில் துணி, சணல் ஆலைகளைப் புதுப்பிக்கவும், நவீன இயந்திரங்கள் வாங்கவும் தேசியத் தொழில் அபிவிருத்திக் கவுன்சில் ரூ. 20 கோடி ஒதுக்கியுள்ளதாம்.

தொழிற்சாலைகளைப் புதுப்பிக்கவும், பழைய இயந்திரங்களை அப்புறப்படுத்தி புதிய இயந்திரங்களை நிறுவுவதற்கும் கடன் தருவதற்காக இந்தக் கவுன்சில் அமைக்கப்பட்டது.

தென்னாட்டைச் சேர்ந்த ஆறு ஆலை முதலாளிகள் இந்தக் கடனுதவியைக் கோரியுள்ளனராம்.

அநேகமாகத் தென்னாட்டிற்கு 3 அல்லது 4 கோடி ரூபாய் கிடைக்கக்கூடும் என்று டில்லிப் பேரரசின் கனரகத் தொழில் அமைச்சர் கூறியுள்ளதாகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் பல்வேறு மாநிலங்கள் கொண்ட தென்னாட்டிற்குக் கிடைக்கும் கடன் உதவியில் தமிழ் மாநிலத்திற்குக் கிடைக்கப்போவது எவ்வளவென்று குறிப்பிடப்படவில்லை.

ரூ. 3,48,000 மோசடி செய்த விமானப்படைஅதிகாரி

பூனாவில் கைதானர்

பூனா, டிச. 25—

ரூ. 3,48,000 வரை மோசடி செய்ததாக, உயர்தர இராணுவ அதிகாரி ஒருவரை போலீசார் கைது செய்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

இந்திய விமானப்படையின் இரண்டாம் பிரிவில், கணக்குகளுக்குப் பொறுப்பாயிருந்த லாலாஸ் என்ற அதிகாரிதான், இந்த பெருமோசடியைச் செய்தவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

இவர் கடந்த செப்டம்பர் முதல் நவம்பர் திங்களுக்குள் மூன்று மாத காலத்தில் இவ்வளவு பெரிய தொகையை மோசடி செய்திருக்கிறாராம்.

நைஜீரியாவில் எண்ணெய் ஊற்று!

நைஜீரியாவில் ஹார்கோர்ட் துறைமுகத்திற்குக் கிழக்கே 20 மைல்களுக்கப்பாலுள்ள அஃபாம் என்னுமிடத்தில் எண்ணெய் ஊற்று இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆழமாகக் குடைந்து பார்த்தால் தான் எண்ணெய் கிடைப்பது பற்றி மதிப்பீடு செய்யமுடியும்; என்றாலும், நல்ல ஊற்று ஒன்று இருப்பது தெரிகிறது. இந்த ஊற்றுக்கு முக்கால் மைல் தூரத்தில் தோண்டிய கிணற்றிலும் நல்ல ஊற்றுப் பெருக்கம் இருப்பதாகத் தெரிகிறது.

மண்மேடாயின!

கெய்ரோ, டிச. 24—

எகிப்திலுள்ள போர்ட் செய்தில் நடைபெற்ற தாக்குதலின் விளைவாக 5,000 கட்டிடங்கள் மண்மேடாகிவிட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

,பந்தியில் வேண்டாம் என்றால் இலை பொத்தல்' என்னும் பேதமை!

தி. மு. க. விடுதலை முழக்கம் கேட்டு தமிழக கம்யூனிஸ்டுகள் குலைநடுக்கம்

காங்கிரசைப் போலவே கழகத்தையும் எதிர்ப்பார்களாம்!

சென்னை, டிச. 25—

"'சுதந்திரத் தனி நாடு' என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோஷம் யதார்த்த நிலையையும், ஒரு புதிய ஐக்கிய இந்தியாவில் மொழிவழி மாநிலங்கள் வேண்டும் என்ற மக்களின் அபிலாஷைகளையும் புறக்கணிக்கிறது என்பதுடன் பிளவூட்டுவதாகவும், சனநாயக விரோதமானதாகவும் இருக்கிறது என்று கடந்த ஜுன் திங்களில் மேற்கொண்ட முடிவையே மாகாண கமிட்டி மீண்டும் உறுதி செய்கிறது.

"இந்தியாவினுடையவும் தமிழ் நாட்டினுடையவும் நலன் கருதி, அந்தக் கோஷத்தை நமது மக்கள் நிராகரிக்க வேண்டும்.

"எனவே, வரப்போகும் பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்டு கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்துடன் எந்தவிதக் கூட்டுச் சேருவது என்ற பிரச்சினை எழவில்லை.

"ஆனால் மாறாக, காங்கிரசின் ஜனவிரோதக் கொள்கையை உறுதியாக எதிர்க்கும் அதேநேரத்தில், கம்யூனிஸ்டுக் கட்சி தனது தேர்தல் இயக்கத்தின்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிளவூட்டுகிற பிரச்சினை கோஷத்தையும் எதிர்க்கும்,"

என்பதாக தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சியின் 'மாகாண கமிட்டி' முடிவு எடுத்திருப்பதாக, அக்கட்சியின் செயலாளர், ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், கம்யூனிஸ்டுக் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் தவிர்த்த இதர சனநாயக கட்சிகளின் அபேட்சகர்களையும் ஆதரிக்கும் என்றும், கம்யூனிஸ்டுகள் சென்னை சட்டசபைக்கு 55 இடங்களிலும் டில்லி மக்கள்சபைக்கு ஆறு இடங்களிலும் போட்டியிடுவர் என்றும் அந்த அறிக்கையில் காணப்படுகிறது.

பி. சோ., பார்வர்டு பிளாக், மற்றும் சனநாயக சுயேச்சைகளுடன் கம்யூனிஸ்டுக் கட்சி காங்கிரசிற்கு எதிராக ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்குவதற்காகத் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது என்றும் முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அறிக்கை கூறுகிறது.

ரஷ்யப் பொருளாதாரத் திட்டம் தோல்வி?

புதிய ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கக் கோரிக்கை

மாஸ்கோ, டிச. 24—

ரஷ்யாவின் தற்போதைய பொருளாதாரத் திட்டம் தோல்வியடைந்து விட்டதாகவும், புதிதாக மற்றொரு ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென்றும் ரஷ்யக் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழு கோரியுள்ளதாம்.

முதலாளித்துவ நாடுகள் தொழிற்சாலைப் பண்டங்கள் உற்பத்தியைப் பெருக்கி வருவதாகவும் அந்தப் போட்டியைச் சமாளிக்கும் வகையில் குறுகிய காலத்தில் உற்பத்தி பெருக வேண்டுமென்றும் கோரப்பட்டிருக்கிறது.

புதிய தொழில்களில் மூலதனம் போடக்கூடாது என்றும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது

'இது ஒரு வசதியா?'

'வெறும் கண் துடைப்பு வேலை'

நாகபுரி, டிச. 25—

"தேர்தல் திட்டத்தின் சுருக்கத்தை வானொலியில் ஒலி பரப்புவதற்கு 10-நிமிடங்கள் மட்டுமே ஒதுக்குவதென டில்லிப் பேரரசு செய்துள்ள முடிவு எதிர்க் கட்சிகளை இழிவுபடுத்துவதாகும்; இது ஒரு வசதியே அல்ல; வெறும் கண் துடைப்பு வேலையாகும்" என்று, பி சோ. கட்சியின் தேசீய நிர்வாக குழு உறுப்பினர் கூறியுள்ளார்.

டில்லிப் பேரரசு தரும் இந்த 'வசதி'யை பி. சோ. கட்சி பயன்படுத்திக் கொள்ளாதெனத் தெரிகிறதாம்.

'விடுதலைச் சிலை' நிறுவ மக்கள் கோரிக்கை

எகிப்தின் போர்ட்செய்த் நுழைவிலுள்ள சூயஸ் கால்வாயைக் கட்டிய பிரெஞ்சு எஞ்சினீயர் பெர்டினாண்டு சிலை வெடிவைத்துத் தகர்க்கப்பட்டுவிட்டதாம்; இச்சிலைக்குப் பதிலாக 'விடுதலைச் சிலை' ஒன்று நிறுவப்பட வேண்டுமென்று மக்கள் கோரிக்கை எழுப்பியுள்ளனர்.

தமிழ்நாட்டில் கடலோர சாலைகள்

சென்னையின் கோரிக்கைக்கு டில்லி தந்த பதில் என்ன?

சென்னை, டிச. 26—

நாகப்பட்டினத்திலிருந்து இராமநாதபுரத்திற்கும், இராமநாதபுரத்திலிருந்து தூத்துக்குடிக்கும் கடலோரமாகச் சாலைகள் அமைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக மேல்(சட்ட)சபையில் மராமத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'ரூ $1\frac{1}{2}$ கோடி செலவாகக்கூடிய நாகை—இராமநாதபுரம் சாலைக்கு மத்திய சாலை நிதியிலிருந்து மானியம் தருமாறு இந்திய சர்க்காரைக் கேட்டோம்; ஆனால், மானியம் தர இயலாதென அவர்கள் தெரிவித்துவிட்டனர். அந்தச் சாலையின் அவசியம் பற்றி மீண்டும் திட்டக் குழுவுக்கு எழுதினோம்; இந்த யோசனையை திட்டக் குழு நிராகரிக்கவில்லை—ஆனால் ஒத்திவைத்திருக்கிறது"

என்று, குறிப்பிட்ட அமைச்சர், மாநில சர்க்கார் திட்டத்தின்கீழ் இந்தச் சாலையை அமைப்பது குறித்துப் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

இராமநாதபுரம் — தூத்துக்குடி சாலை அமைப்பதற்கு ஆகும் செலவை மத்திய சாலை நிதியில் சென்னையின் பங்கிலிருந்து செலவழித்துக்கொள்ள இந்திய சர்க்கார் சம்மதித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

சட்டக் குழு சென்னை வருகை

இந்திய அரசாங்கத்தால நியமிக்கப்பட்டுள்ள சட்டக் குழு ஜனவரி 3-ந்தேதி சென்னை வருகிறது. இங்கு 26-ம் தேதிவரை செயல்படும்.

மதுரை நகரசபை எதிர்க் கட்சி முதலாண்டு விழா

தோழர் எஸ். முத்து சொற்பொழிவு

மதுரை, டிச. 22—

இன்று மாலை 7 மணிக்கு, திலகர் திடலில் தோழர் எம் செல்லையா தலைமையில், மதுரை நகரசபை எதிர்க்கட்சியின் முதலாவதாண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கடந்த ஓராண்டில் எதிர்க்கட்சியின் சாதனைகளை விளக்கியும், மதுரை நகரசபையில் பெரும்பான்மையினரான காங்கிரசாரின் எதேச்சாதிகாரத்தைக் கண்டித்தும் பேசினர்.

தோழர் இ. ரெங்கசாமி, எம் சி. பேசியபின் தோழர் காமராஜ் எம்.சி.(பொதுவுடைமை) அவர்கள், எதிர்க்கட்சியினர் நெருக்கடியான நேரங்களில் தம் உரிமைகளைப் பயன்படுத்தி நகரசபையைக் கூட்டிய முறைகளை விளக்கினர்.

"கலெக்டர் தம் குறிப்பிலே தவறுகளை மட்டும் சுட்டியுள்ளார்—மதுரை நகரசபையின் 1955–56ம் ஆண்டு நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்பிது; நாங்கள் செய்த நன்மைகளைப் பற்றி ஒன்றும் குறிக்கவில்லை. பொருட்காட்சி நடத்தி ரூ. 70,000 இலாபம் காட்டினோம். மக்கள், புயலால் தாக்கப்பட்ட போது, புரட்சி நடிகர் எம் ஜி இராமச்சந்திரன் தலைமையிலே புயல் நிவாரண நிதி திரட்டத் தெருத்தெருவாய் அலைந்தோம். இப்படிப்பட்ட நல்ல பணிகளைப் பற்றி ஏதும் குறிப்பிடாமல், சபையின் கௌரவம் எதிர்க்கட்சியால் பாழாக்கப்படுவதுபோல் கலெக்டர் நிர்வாகக் குறிப்பு எழுதியது தவறு," என்று தோழர் காமராஜ கூறினார்.

அடுத்து தோழர் என். ஆர். இராமகிருட்டிணன் எம். சி. (சுயேச்சை) பேசியபின், தோழர் எஸ். பி. ஆண்டி எம்.சி. பேசினர்.

பின், தோழர் எஸ். முத்து எம் சி. (தி. மு. கழகம்) பேசியதாவது:—

"இந்த எதிர்க்கட்சியிலே இருப்போர் பலதரப்பட்ட அரசியல் நோக்கங்களை உடையோராயினும், மதுரை மக்களது வாழ்க்கை உயர்வு, சுகாதார வசதிகள் ஆகியவற்றிற்காக ஒன்றுபட்ட கருத்துடன் ஒத்துழைக்கின்றனர்.

"எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது கெட்ட எண்ணம் உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மதுரை நகரசபையில் அடிக்கடி போலீசு நடவடிக்கையை உண்டாக்குகின்றனர் சிலர்; காங்கிரசாரின் போக்கை உணர்ந்தோர் இதுபற்றிய உண்மையைத் தெரிந்துகொள்ளுவார்கள்.

"பல்லாண்டுகளுக்குமுன் வைகை மைய மண்டபத்திற்கு அருகில் தண்ணீர் தந்துவந்த மூன்று கிணறுகள் பற்றி, தோழர் கருப்பையா (கம்யூனிஸ்டு உறுப்பினர்) தெரிவித்து, அதனைப் பயன்படுத்தித் தண்ணீர் நெருக்கடியைத் தீர்க்க வழி காட்டினர். ஆனல் சிறுமதி படைத்த காங்கிரசார் தாங்கள்தான் அதைச் செய்ததாகக் கூறுகின்றனர்; காங்கிரசே கொண்டுவந்ததாகத் தீர்மானமும் நிறைவேற்றியுள்ளனர்.

"நன்மையான செயலை எவர் செய்தாலும் வரவேற்கிறோம்; இரு கைகூப்பி வணங்குகிறோம்

"நகரசபையார் கவனக்குறைவால், பொதுக் கக்கூசில் தீ பிடித்து இறந்த தொழிலாளி குடும்பத்திற்கு ரூ. 1000 நஷ்டஈடு தர மறுக்கும் இந்தக் காருண்ணியமிக்க காங்கிரசுக் கவுன்சிலர்கள் தான், விநோபா பாவே வரும்போது ரூ. 5,000 'சம்பத் தானம்' தரப்போனார்களாம்!

"தேவிகுளம், பீர்மேடு தேவை என்று சட்டசபையில் காங்கிரசார் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்; மதுரை நகரசபைக் காங்கிரசாரோ, எதிர்க்கட்சியினர் கொண்டுவந்ததற்காக அதே தீர்மானத்தை நிறைவேற்ற மறுத்தனர்.

"மேலும், இந்நகரசபையில் பில் கலெக்டர் வேலைக்கான பேட்டியின் போது 18—20 வயது இளைஞரைக் காட்டி 'பிராக்சி' செய்துவிட்டு, 55 வயதைக் கடந்த ஒருவருக்கு வேலை தந்திருக்கிறார்கள். இவ்வாறான தவறுகளெல்லாம் காங்கிரசுக் கவுன்சிலர்கள் கண்ணில் தென்பட்டாலும், அவர்கள், தவறைக் கண்டிப்பதில்லை; தலைமைப் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்."

அடுத்து, தோழர்கள் எஸ். கருப்பையா எம்.சி., தாஸ் ஆகியோர் பேசியபின் தலைவர்முடிவுரையுடன் கூட்டம் முடிந்தது.

கூட்டத்தில், சென்னை அரசினர் தமிழை ஆட்சி மொழியாக்கியிருப்பதைப் பாராட்டியும், சென்னைக்குத் 'தமிழ் நாடு' எனப் பெயர் வைக்க வேண்டியும் வைகை அணைக்கட்டிலிருந்து மதுரை நகருக்குத் தண்ணீர் தரும் வைகை 'ரிசர்வாயர்' திட்டத்துக்குச் சென்னை அரசாங்கம் தக்க மானியம் தரக் கோரியும், 1955—56-ம் ஆண்டு நிர்வாகத்தில் மதுரை நகரசபையில் கௌரவக் குறைவு பெருகியிருப்பதாகக் கலெக்டர் எழுதிய குறிப்பைக் கண்டித்தும், அது சம்பந்தமாக ஒரு தூதுக் குழு கலெக்டரைக் கண்டு பேசுவதென்றும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தேநீர் விருந்து

பொதுக்கூட்டம் துவங்குவதற்கு முன் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் மற்றைய உறுப்பினர்களுக்கும் நகரப் பெருமக்களுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும் தானப்ப முதலி தெரு, பெண்கள் பள்ளியில் தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

சேலத்தில் செயற்குழு, பொதுக்குழு கூட்டங்கள்

"29—12—56 பிற்பகல் 2-மணிக்கு, தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம், சேலம் சென்டிரல் டாக்கிசுக்கு எதிரில் உள்ள தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும்.

"30—12—56 காலை 10-மணிக்கு, அன்னதானப் பட்டி (27-வது வட்டம்) பிட்டா ரைஸ் மில்லில் பொதுக்குழுக்கூட்டம் நடைபெறும்.

"அந்த ரைஸ் மில்லிலேயே, எல்லா உறுப்பினர்களுக்கும் தங்கவும் குளிக்கவும் நல்ல முறையில் வசதி செய்யப்பட்டிருக்கிறது

"செயற்குழுஉறுப்பினர்களுக்கும், பொதுக் குழு உறுப்பினர்களுக்கும், காலை. பகல், மாலை, இரவு உணவுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

"ஜோலார்பேட்டை வழியாகச் சேலம் வருகிறவர்கள் சேலம் சந்திப்பு இரயில் நிலையத்தில் இறங்க வேண்டுகிறோம்.

"விருத்தாசலம் வழியாக வருகிறவர்கள் சேலம் மார்க்கட் இரயில் நிலையத்தில் இறங்க வேண்டுகிறோம்.

"கூட்டங்களில் கலந்து கொள்ள வரும் உறுப்பினர்களை, இரயில் நிலையங்களிலிருந்து கழகத் தோழர்கள் அழைத்துச் செல்வார்கள்.

"பஸ் மூலம் வருகிறவர்கள், பஸ் ஸ்டாண்டில் இறங்கினல் அங்கிருந்தும் கழகத் தோழர்கள் அவர்களை அழைத்துச் செல்வார்கள்.

"பொதுக்குழு நடைபெறும் ரைஸ் மில்லில் டெலிபோன் அமைக்கப்பட்டிருக்கிறது. (டெலிபோன் எண், 544).

"செயற்குழு, பொதுக் குழுக் கூட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் ஒழுங்குபெற நடைபெற்று வருகிறது.

"30—12—56 மாலை 6-30 மணிக்கு 'வி' மார்க்கெட்டில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்."

என்று, சேலம் நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஈ. ஆர் கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

தற்கொலையில் ஆண்களை பெண்கள் மிஞ்சிவிட்டனர்

பாரிஸ், டிச. 25—

உயர்ந்த கட்டிடங்களிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொள்ளும் ஆண்களின் எண்ணிக்கைக்கு இரு மடங்காகப் பெண்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது என்று பிரெஞ்சு சட்ட—வைத்திய நிலயம் தெரிவித்துள்ளது.

ஆண்கள் பெரும்பாலும் நீரில் மூழ்கியும், தூக்கு போட்டுக்கொண்டும் இறக்கின்றனராம்!

சவ்வரிசி ஏற்றுமதிக்கு தாராள அனுமதி

பம்பாய், டிச. 24—

இந்தியாவிலுள்ள போர்ச்சுகீசியப் பகுதிகள் நீங்கலாக, அனுமதிக்கப்பட்டுள்ள மற்ற எல்லா நாடுகளுக்கும், அளவு கட்டுப்பாடு ஏதும் இல்லாமல் அடுத்த ஆண்டு (1957) டிசம்பர் முடிய தாராளமாக சவ்வரிசி (மரவள்ளி ரவை) ஏற்றுமதி செய்யலாமாம்.

வி. ஆர். ஆதிமூலம் உடல் நிலை

வேலூர் நகர தி. மு. கழக முன்னாள் செயலாளர், மாவட்ட உறுப்பினர் தோழர் வி ஆர். ஆதிமூலம், கடந்த 2 மாத காலமாக உடல் நலக் குறைவால் சர்க்கார மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். 24-12-56-ல் தோழர்கள் ஏ. எல். சி கிருஷ்ணசாமி, வே. அ. இளஞ்செழியன், பாண்டியன், மற்றும் கழக நண்பர்கள் அவரைப் பார்த்துவந்தனர்.

தி. மு. க. தேர்தல் நிதிக்கு பக்கிங்காம் கர்னடிக் ஆலைத் தொழிலாளர்கள் அன்பளிப்பு

பொதுச்செயலாளரிடம் ரூ. 518—2—6 வழங்கினர்

சென்னை, டிச. 26—

சென்னை—ஓட்டேரி, பாஷ்யம் செட்டித் தெருவில், 25-12-56 மாலை 6-30 மணி அளவில், பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர் சார்பில் தி. மு. க. தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

நிதிக் குழுச் செயலாளர் தோழர் கே. சுப்பிரமணி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்

தோழியர் அலமேலு அப்பாதுரை, தோழர் கண்ணதாசன் ஆகியோர் தேர்தலில் தி. மு. கழகம் ஈடுபடுவதன் நோக்கம் குறித்தும், தி. மு. கழகத்தைப் பொதுமக்கள் தேர்தலில் ஆதரிக்கவேண்டிய அவசியம் குறித்தும் பேசினர்.

பின்னர், தோழர் ஆலூர்-நடராசன் கே. வி. கே சாமி இரவுப் பள்ளியைத் திறந்து வைத்தார்

அடுத்து நிதிக் குழுப் பொருளாளர் தோழர் எல்லப்பன் பி. அண்டு சி. ஆலையின் பல்வேறு பிரிவுகளின் மூலம் வசூலான தேர்தல் நிதித் தொகை ரூ. 518-2-6-ஐ பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் அளித்தார்.

தொடர்ந்து, 24-வது வட்டத்தைச் சேர்ந்த திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றம், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மன்றம், தி. மு. க. படிப்பகம் ஆகியவற்றின் சார்பில் ரூ. 88—2—3ம்; கொத்தனர் சொசைட்டி சார்பில் மேஸ்திரி சாம்பசிவம் மூலம் வசூலான ரூ. 16—10—9ம்; கூட்டத்தில் உண்டியல் மூலம் வசூலான ரூ 9—9—6ம்; தோழர் இரத்தினசபாபதி அளித்த ரூ. 1-ம் தேர்தல் நிதிக்கு பொதுச்செயலாளர் அவர்களிடம் அளிக்கப்பட்டன.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்களும் பிறரும் தேர்தல் நிதி அளித்தமைக்குப் பாராட்டு தெரிவித்ததுடன், தி. மு. கழகம் தொழிலாளர்—நடுத்தர மக்கள் ஆகியோரின் அமைப்பு என்றும், அவர்களுக்கே உரித்தான அந்த அமைப்பை அவர்கள் தேர்தலில் அவசியம் ஆதரிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டுப் பேசினர்.

இந்நிலையில், பலத்த மழை பெய்யத் தொடங்கவே பொதுச்செயலாளர் தமது பேச்சை அத்துடன் முடித்துக் கொண்டார்.

நல்ல மழைபெய்தும், பொதுச்செயலாளர் அவர்கள் கலைந்து செல்லும்படி கேட்டுக்கொண்ட பின்னரே பொதுமக்கள் கலைந்து சென்ற நிகழ்ச்சி, கட்டுப்பாட்டின் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது

கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும், தோழர் கண்ணதாசன் அவர்களுக்கும் பல்வேறு அமைப்புகளின் சார்பில் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

சேதி கேட்டீரா!

சென்னை, டிச. 25—

தென்னிந்தியாவில் அறுவடை நெருங்கிவிட்டபடியாலும், அரிசி விலை குறைந்திருப்பதாலும், மத்திய அரசாங்கம், மாநிலத்தின் அதிகப்படியான அரிசி கையிருப்பைக் கொள்முதல் செய்து, நெருக்கடி ஏற்பட்டால் நியாய விலைக் கடைகளுக்கு விநியோகிப்பதற்கு சேமிக்க முடிவு செய்துள்ளதாம்!

ஆசிரியருக்குக் கடிதம்:

ஆளும் கட்சி என்ற அகந்தையா?

ஐயா,

"காங்கிரஸ் தலைவர் தேபர் அவர்களுக்குப் பல தடவைகளில் பொது விஷயங்களைப் பற்றியும் முக்கியமாக கிராம வாழ்க்கையைப் பற்றியும் பல கடிதங்களை எழுதி வந்திருக்கிறேன்; எல்லாக் கடிதங்களையும் ஆங்கிலத்தில் எழுதி வந்தேன். அவைகளுக்கு இதுவரையில் அவர் பதில் எழுதியதே கிடையாது.

"8-12-56 அன்று, 'வரிகொடா இயக்கம் ஆரம்பிக்க இதுவே தருணம்,' என்று தமிழில் ஒரு கடிதம் எழுதி அச்சடித்து அவருக்கு அனுப்பியிருந்தேன். 'சென்னை சர்க்கார் ஊழியர்களும் அமைச்சர்களும் கவனக்குறைவாய் இருந்ததால் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 78 இலட்சம்' என்று 1954—55-ம் ஆண்டு கணக்குப் பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அதை எடுத்துக் காட்டியிருந்தேன், அந்தக் கடிதத்தில்!

"இது தவிர்க்கக்கூடிய நஷ்டங்கள் என்று கணக்குப் பரிசோதனை அறிக்கையே கூறுகிறது; ஆகவே, தற்போது இருக்கும் சென்னை மந்திரி சபை உறுப்பினர்களை அடுத்துவரும் தேர்தலில் நிறுத்தக் கூடாது என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

"அதற்கு 18-12-56 தேதியிட்ட பதிலில் 'நீங்கள் எழுதியிருக்கும் மொழியை (தமிழை) படிக்க முடியாமையைப்பற்றி மிக வருத்தமாய் இருக்கிறது,' என்று தேபரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது!

"இது ஒரு நிறுவனத் தலைவரின் பொறுப்பான பதிலாகுமா? ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்ற அகந்தையா, அல்லது தமிழ்மீதும் தமிழன்மீதும் உள்ள வெறுப்பா?

"தமிழ் மக்களே! 'பச்சைத் தமிழர்'களே! ஊன்றிக் கவனியுங்கள்.

"தேபருக்கு மதிகேட்டு வருவது நல்ல அறிகுறியாகும். ஒன்று சேருங்கள்; தமிழன் பெருமையையும் பண்பையும் நிலைநாட்டுங்கள். நல்ல மனிதனுக்கு ஒரு வார்த்தை;நல்லமாட்டுக்கு ஒரு சூடு என்ற நிலைமை மாறிவிட்டது."

சங்கு கணேசன்
19-12-56

'காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டுபோடாதீர்'

பழங்குடிமக்களுக்குசம்மேளனத்தின்முறையீடு

"நம் இனமக்களை அடிமைகளாகவும் கூலிகளாகவும் வைத்திருக்கும் காங்கிரஸ் கட்சிக்கு, தாழ்த்தப்பட்ட இனமக்கள், வருகிற பொதுத் தேர்தலில் ஓட்டு போடக்கூடாதென்று இக்கமிட்டி கோருகிறது."

—என்ற தீர்மானம், தாழ்த்தப்பட்டோர் சம்மேளனக் கமிட்டிக் கூட்டத்தில் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டிருக்கிறது.

23-12-56 காலை 9 மணிக்கு தாழ்த்தப்பட்டோர் சம்மேளனக் கமிட்டி (தமிழ்நாடு மகாசபை)யின் கூட்டம், சென்னை—தண்டையார் பேட்டையிலுள்ள சம்மேளனக் கட்டிடத்தில், திரு. ஏ. இரத்தினம் எம். எல். ஏ., தலைமையில் நடைபெற்றது.

தமிழகத்திலுள்ள எல்லாப் பிரமுகர்களும் உறுப்பினர்களும், கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பொதுச்செயலாளர் கே. எம். சாமி அவர்கள் கமிட்டியின் நோக்கத்தை விளக்கியபின், கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

அ. இ. தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவர் அண்ணல் அம்பேத்காரின் மரணத்திற்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறது.

வருகிற பொதுத் தேர்தலில் சம்மேளனம் போட்டியிடத் தீர்மானிக்கிறது.

தமிழகத்திலுள்ள முற்போக்குக் கட்சிகளுடனும் இதர மைனாரிட்டி கட்சிகளாகிய முஸ்லிம் லீக், திராவிட இயக்கங்கள்—பிற்பட்ட சமூகக் கட்சிகளுடனும் கூட்டுறவு ஏற்படுத்திக்கொள்ளவும், அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பையும், சம்மேளனத்தின் தமிழ்நாடுத் தலைவருக்கும் செயலாளருக்கும் அதிகாரமளிக்கிறது.

பத்திரிகை விற்பவர் எம்.ஏ. பட்டம் பெற்றார்

காசி, டிச. 25—

இந்திரா தேவாசி என்பவர் பத்திரிகைகள் விற்றுப் பிழைப்பவர்; சமீபத்தில் நடைபெற்ற காசி பல்கலைக் கழகப் பரீட்சையில் அவர் எம் ஏ. பரீட்சை தேறியுள்ளார் என்று தெரியவருகிறது.

சென்னை மாநிலத்தில் 1956 செப்டம்பர் மாத இறுதிவரை 1,02,900 ஏக்கர் நிலத்தில் பருத்தி பயிரிடப்பட்டது என்றும், இது சென்ற ஆண்டு பரப்பைவிட 2 சதவிகிதம் அதிகம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சர்க்கார் ஊழியர்கள் சம்பள உயர்வு போராட்டம்

டில்லியின் அதிகாரபூர்வமான அறிவிப்பை சென்னை எதிர்பார்க்கிறதாம்

சென்னை, டிச. 26—

ரூ 100 வரை சம்பளம் பெறும் சர்க்கார் ஊழியர்களுக்குக் கிராக்கிப்படியில் ரூ. 12 வரை அதிகரிக்கப்படும் என்று மத்திய நிதி மந்திரி டி. டி கிருஷ்ணமாச்சாரி அறிவித்திருப்பதை ஒட்டி அதிகாரபூர்வமான அறிவிப்பினை சென்னை சர்க்கார் டில்லியிலிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்று நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

புள்ளி விவரம்

மேலும், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அந்த மந்திரி, 1956 நவம்பர் முதல் தேதியன்று நிகழ்ந்த மாநில புதிய அமைப்பிற்கு முன்பாக, பலதர ஊழியர்களுக்குமாக சென்னை சர்க்கார், சம்பளமாக ரூ. 970 இலட்சமும், கிராக்கிப்படியாக ரூ. 350 இலட்சமும், வீட்டு வாடகைப்படியாக ரூ. 56 இலட்சமும் ஆண்டுதோறும் கொடுத்து வருகின்றனர் என்றும் கூறியிருக்கிறார்.

பின்னர், 1956 நவம்பர் முதல் கிராக்கிப்படி உயர்வு தருவதின் மூலம் சர்க்கார் ரூ. 80 இலட்சம் செலவிட்டு வருகின்றனர் என்றும் கூறியிருக்கிறார்.

குறைந்தபட்ச சம்பளம்

'மாதம் ஒன்றுக்கு ரூ. 200 ஆகவேண்டும்'

மந்திரி டி. டி. கே. ஆசைவார்த்தை

சென்னை, டிச. 26—

"இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில், மாதம் ஒன்றுக்கு ஒருவரின் குறைந்தபட்ச சம்பளம் ரூ. 200 ஆக உயர்த்தப்படவேண்டும்; இது நடைபெறாவிட்டால், நாம் மக்களுக்கு ஏதோ நன்மை செய்தோம் என்பதில் அர்த்தமே இல்லை,"

என்று மத்திய மந்திரி டி டி. கிருஷ்ணமாச்சாரி, பெண்கள் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பி. சோ. தொண்டர்கள் ஆர்ப்பாட்டம்

135 பேர் கைதாயினர்

பம்பாய், டிச. 24—

அங்கேரியில் ரஷ்யத் தலையீட்டைக் கண்டித்து பி. சோ. கட்சியினர், பம்பாயிலுள்ள ரஷ்ய வாணிபப் பிரதிநிதி காரியாலயத்தின் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடத்திவருகின்றனர்.

இதுவரையில் 135 தொண்டர்களைப் போலீசார் கைது செய்துள்ளனர்.

பலியானோர் தொகை உயருகிறது!

நியூயார்க், டிச. 27—

அமெரிக்காவில் கிறிஸ்துமஸ் விடுமுறையின்போது நடந்த இரண்டு நாட்களில் மொத்தம் 831 பேர் விபத்துகளில் பலியாகியுள்ளனர்.

தமிழ் நாட்டிலுள்ள......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆண்டிலிருந்து நடைபெறுமெனத் தெரிகிறது.

இந்த ஏலகிரி மலை, கடல் மட்டத்திலிருந்து 3,500 அடி உயரமுள்ளதாம்.

இங்குள்ள 16 கிராமங்களில் ஆங்கிலோ—இந்தியர்களும், இந்தியர்களும் வசித்து வருவதாகவும், அவர்கள் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிகிறது.

இந்தச் சாலையமைப்பு வேலை முடிந்தபின், எதிர்காலத்தில் இது ஒரு சிறந்த கோடைகாலத் தங்குமிடமாக விளங்கும் என்றும் கூறப்படுகிறது.

3,75,000 நெசவாளர்

பாதிக்கப்படும் வரி விதிப்புக்குக் கடுமையான எதிர்ப்பு

பொது வேலைநிறுத்தம்; 100 பேர் கைது

கல்கத்தா, டிச. 26—

கைத்தறி துணிமீது விதிக்கப்படும் விற்பனை வரியை ரத்து செய்யவேண்டும் என்றும், ஆலைத் துணிகள் உற்பத்தியாகும் இடத்தில் மட்டுமே விற்பனைவரி விதிக்கப்படவேண்டும் என்றும், துணி லைசென்ஸ் முறை முற்றிலும் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்றும் கோரி, கல்கத்தாவிலும் மேற்கு வங்கத்தின் மற்ற நகரங்களிலுமுள்ள துணி வியாபாரிகள் இன்று பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

கல்கத்தாவில் புர்ரா பஜார் பகுதியில் மறியல் செய்ததாக சுமார் 100 பேரைப் போலீசார் கைது செய்துள்ளனர்.

கைத்தறித் துணிகள்மீது விதிக்கப்படும் விற்பனை வரியை மாற்றாவிட்டால், 3,75 000 நெசவாளர்கள் பாதிக்கப்படுவர் என்று கூறப்பட்டிருக்கிறது.

பீடித் தொழிலாளர் போராட்டம் வலுக்கிறது

இதுவரையில் 394 பேர் கைது

சென்னை, டிச. 27—

சென்னை சட்டசபைமுன் நடைபெறும் பீடித் தொழிலாளர் போராட்டம் நீடித்து வருகிறது; இதுவரையில் மொத்தம் 394 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்?

கோவை, டிச. 27—

சம்பள உயர்வு கொடுக்கும்படி தொழில் கோர்ட் அளித்த தீர்ப்பை அமுல்நடத்த வேண்டுமென வற்புறுத்தி நீலகிரி மாவட்டத் தோட்டத் தொழிலாளர்கள் டிச. 29-ந் தேதியன்று அடையாள வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளனர்.

சனவரித் திங்கள் சம்பளம்பெற மறுப்பர்

சென்னை, டிச. 25—

சம்பளக் கமிஷன் சிபாரிசுப்படி, கிராக்கிப் படி உயர்வு, மற்றொரு சம்பளக்குழு நியமனம் ஆகிய இரு கோரிக்கைகளையும் வற்புறுத்துவதற்காக அகில இந்திய நிர்வாக அதிகாரிகள் காரியாலயச் சிப்பந்திகள், வரும்சனவரித் திங்கள்சம்பளத்தைப்பெற மறுப்பதென்று தீர்மானித்துள்ளனர்.

இயலாத ஒன்றென அமைச்சர் உணர்வு?

சென்னை, டிச 27—

தற்போது சென்னை நகரிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் அரசாங்கம் பஸ் போக்குவரத்தை ஏற்று நடத்தி வருகிறது. இதைச் சரிவர நடத்துவதற்கே இப்போது வேலை சரியாக இருக்கிறது; ஆகவே, வெளியூர் பஸ் போக்குவரத்தை ஏற்று நடத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லையென்று சட்டசபையில் அமைச்சர் சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

அண்ணா

என். வி. நடராசன்

★

சுற்றுப்பயண நிகழ்ச்சி:

டிசம்பர்

29: காலை—தர்மபுரி- சிறப்புக் கூட்டம்;
பிற்பகல் 2 மணி — சேலம்-மத்திய செயற் குழுக் கூட்டம்;
மாலை 5 மணி—அரூர் நகராண்மைக் கழக வரவேற்பு;
இரவு 7 மணி—அரூர் தி. மு. கழக நிதி அளிப்புக் கூட்டம்;

30: காலை 8-30 மணி—சேலம் -அம்மாப்பேட்டைத் தி. மு. கழகக் கட்டிடம் (இருளப்பன் நினைவு நிலையம்) திறப்பு விழா;
காலை 10மணி—பொதுக் குழுக் கூட்டம்;
மாலை 6 மணி—பொதுக் கூட்டம்;

31: மாலை 6 மணி—பொறையார் நிதி அளிப்புக் கூட்டம்;

ஜனவரி

1: மாலை—குளித்தலை நிதி அளிப்புக் கூட்டம்;

2: காலை 10 மணி-திருப்பூர் சிறப்புக் கூட்டம்.

பசுமலைப்பட்டி கிராம முன்னேற்றக் கழகத் துவக்க விழா

29—12—56 மாலை 5 மணிக்கு பசுமலைப்பட்டி அண்ணா திடலில் தோழர் அ. பிச்சை தலைமையில், கிராம முன்னேற்றக் கழகத் துவக்க விழா நடைபெறும். தோழர்கள் டி. கே சீனிவாசன், இரா. முகிலன், மற்றும் பலர் பேசுவர்.

சித்திர வேலைப்பாடமைந்த கைப்பிடிகள்

மதுரையில் பயிற்சி நிலையம்

சென்னை, டிச. 24—

அலமாரி, கதவுகள், மேசைகள், கார்கள் முதலியவைகளுக்கு சித்திர வேலைப்பாடமைந்த கைப்பிடிகளைத் தயாரிப்பதற்கு மதுரையில் ஓர் பயிற்சி நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் ரூ. 40,250 மானியமாகவும், ரூ. 12,000 கடனாகவும் சென்னை அரசாங்கத்திற்கு அளிப்பதற்கு முன்வந்துள்ளதாம்.

பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

28—12—56 வெள்ளி பகல் 2 மணிக்கு

விளையாட்டுப் பகுதித் தலைவர்: அமைச்சர் எஸ். எஸ் இராமசாமி படையாட்சி

ரேக்ளா, சைக்கிள், ரிக்ஷா ஓட்டப்பந்தயங்களும் சர்க்கஸ், நந்திரக்காட்சி, பம்பாய்நடனம், ஓவியக்கலை—இன்னும் பல

★

சகுந்தலா கலை அரங்கில்—மாலை 6-மணிக்கு

குமாரி மதுரம், சந்திரன் & குழுவினர் அளிக்கும்

நாட்டிய நாடகங்கள்

எம். எஸ். மோகன்—காண்டிராக்டர்

அரூரில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்பு

29-12-56 மாலை 5 மணிக்கு, அரூர் ரேடியோ மைதானத்தில், அரூர் வட்டக் கழகங்களின் சார்பில், தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக் கூட்டம் நடைபெறும்.

அண்ணா அவர்களும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் பேசுவர்.

ஊராண்மைக் கழக வரவேற்பு

அன்று மாலை அரூர் ஊராண்மைக் கழகச்சார்பில் அண்ணா அவர்களுக்கும் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுக்கும் வரவேற்பு அளிக்கப்படும்.

பவானி தொகுதி

தி.மு.க. கிளைச் செயலாளர்கட்கு:

31—12—56 அன்று கோபிக்கு வருகைதர இருக்கிற பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் பவானி தொகுதி தி. மு. கழகச் சார்பில் தேர்தல் நிதி தரவேண்டியிருப்பதால், 31—12—56 காலை 9 மணிக்கு, கோபி முசாபரி பங்களாவில் நடைபெற இருக்கும் பவானி தொகுதிக் குழுக் கூட்டத்தில், அச்சிட்ட தேர்தல் நன்கொடை இரசீதுப் புத்தகங்கள் பெற்றுச் சென்ற தோழர்களும் மற்றையோரும் வசூலித்த நிதித் தொகையுடன் வந்து கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்,"

என்று, பவானி தொகுதி தி. மு கழகச் செயலாளர் ஆர். துரை அறிவிக்கிறார்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

கோபி வருகை

31-12-56 மாலை 7 மணிக்கு, கோபி பெரியார் மைதானத்தில் கோபி நகர தி. மு. கழகச் சார்பில் நடைபெறும் தேர்தல் நிதிஅளிப்புப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் நிதி வழங்கப்படும்.

தேர்தல் நிதி உதவுவோர் எஸ். எம். ஷரீப் எண் 10; மெயின்ரோடு, கோபி—என்ற முகவரிக்குக் கொடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆற்றலற்று இயங்குகிறதா அமைச்சரவை?

சென்னை, டிச 27—

தஞ்சை மாவட்டத்தில் பயிர்களுக்குப் பூச்சித் தொல்லை அதிகரித்து வருகிறது; இதனால் பயிர்கள் நாசமாகிறது.

இதைச் சுட்டிக்காட்டி, 'பூச்சி தொல்லையை ஒழிப்பதற்கு விமானம்மூலம் பூச்சி மருந்தை வீசுவார்களா?' என்று சட்டசபையில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில், 'விமானம்மூலம் மருந்துவீசும் ஆற்றல் நமக்கு இல்லை' என்று கூறியுள்ளார்.

'உத்திரப் பிரதேச மாநிலத்தில் கூட விமானம்மூலம் பூச்சி மருந்தை வீசுகிறார்களே?' என்று கேட்கப்பட்டபோது, அமைச்சர் 'அது பற்றி எனக்குத் தெரியாது; ஆனால், பூச்சி மருந்து தெளிக்கும் இயந்திரங்களை அதிகம் கொண்டு வருகிறோம்' என்று கூறியிருக்கிறார்.

நிறவெறியின் எதிரொலி!

மாண்டகோமரி, டிச. 25—

பஸ்களில் நிறவேற்றுமை கூடாது என்று சமீபத்தில்தான் அமெரிக்க சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது. ஆனால், அமெரிக்காவிலுள்ள அலபாமாவின் தலைநகரமான மாண்ட்கோமரியில், ஒரு நீக்ரோ மாது பஸ்ஸிலிருந்து இறங்கும்போது, 5 வெள்ளையர்கள் அவரைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர்.

மாணவர்களே கேளீர்!

ஆக்ரா, டிச. 24—

உத்திர பிரதேச மாநில வழக்கறிஞர்கள் மாநாட்டில் பேசுகையில், கவர்னர் முன்ஷி, 'தற்காலத்தில் சட்டம் பயிலும் மாணவர்கள், 'லீகல்,' 'லாயர்' என்ற வார்த்தைகளைக்கூடச் சரியாக உச்சரிக்க இயலாதவர்களாக உள்ளனர்,' என்று குறிப்பிட்டுள்ளார்.

****

தி. மு. க. தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணா அவர்களும் ... கழகத் தோழர்களும் நடிக்கும்

சந்திரோதயம்

★

ஜன. 3: கோவை நகர்	ஜன. 17: போளூர்
„ 15: பூந்தமல்லி (செங்கற்பட்டு மாவட்டம்)	„ 18: சேலம் நகர்
	„ 19: திருச்சி நகர்
„ 16: காஞ்சிபுரம்	„ 20: மதுரை நகர்

★

மேற்கண்ட தி. மு. க. கிளைகளின் நிர்வாகிகள், நாடக ஏற்பாட்டினைச் சிறப்புற நடத்திக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் முயற்சி இனிது நிறைவேற அனைவரும் பேராதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.